REGD. No. M. 6311

PHONE No.: 55630

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 312

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்.. அண்ணாதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY : THE OFFICIAL ORGAN OF: THE D.M.K.

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: வைகாசி 32உ திங்கள் (14—6—54) ★ ★ ★ வெளியூர்: ஆனி 1உ செவ்வாய் (15—6—54)

காங். ஆதிக்க வெறி: குன்சுரு கண்டனம்!

அரசியல் சட்டத் திருத்தம்! | மக்கள் உரிமையைப் பறிக்கும் சதி!

நியாயமான ஊழல்களைத் தடுக்கும் முயற்சிக்குத் தடை!

வெள்ளையாட்சித் துணியாததை காங்கிரஸ் ஆட்சி செய்யத் துணிகிறது!

இந்திய அரசியல் சட்டம், காங்கிரஸ் கட்சியின் சொந்தத் தயாரிப்பு!

காங்கிரஸ் அடிப்படை கோட்பாடுகளில், நியாயமான கருத்து வேற்றுமை கொண்டிருந்தவர்களின் கருத்து, நடைமுறையில் உள்ள அரசியல் சட்டத்தில் இடம் பெறவில்லை.

மற்ற கருத்தினருக்கு இடமளிக்காமல், தங்கள் விருப்பு வெறுப்புக்கேற்ப, காங்கிரஸ் கட்சியினரே உருவாக்கிய ஏக போக திட்டமும், அடிக்கடி திருத்தம் செய்யப்பட வேண்டியதாக இருக்கிறது.

அப்படி திருத்தம் செய்யப்படுவதும், மாற்றுக் கட்சியினரால் அல்ல; மக்கள் நலன்களைக் காப்பதற்காகவுமல்ல; காங்கிரஸ் ஆளவந்தார்களால், தங்கள் ஆதிக்க வெறியைக் கடிவாளமற்றதாக ஆக்கிக்கொள்ளுவதற்காகச் செய்வதாகவே இருக்கிறது.

உலகத்தவரை மயக்க, 'மக்கள் அடிப்படை உரிமை' என்ற ஒரு பிரிவை பகட்டாகச் சேர்த்திருக்கின்றனர், அரசியல் சட்டத்தில், காங்கிரஸ் கட்சியினர்!

காங்கிரஸ் அமைச்சர் குழுவினர் செய்யும் சட்டங்கள் அனைத்தும், அரசியல் சட்டத்தில் தரப்பட்டுள்ள தனி நபர் அடிப்படை உரிமைகளைக் குலைப்பனவாக இருக்கின்றன.

உயர்நீதி மன்றங்கள், ஆட்சியாளர்களின் ஆதிக்க வெறியைச் சுட்டிக்காட்டி, மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தன. எனவே, சிறுகச்சிறுக, அடிப்படை உரிமை விதிகளைத் திருத்துவதில் காங்கிரஸ் கட்சி முன்வந்தன—முன்வருகின்றன.

அரசியல் சட்ட விதிகளை மேலும் திருத்துவதற்காக, அகில-இந்திய காங்கிரஸ் குழு, ஒரு அணைக் குழுவை நியமித்தது. அக்குழு செய்த சிபார்சுகளை, இந்திய ஊழியர் சங்கத்தின் உறுப்பினரான டாக்டர் குன்சுரு வன்மையாகக் கண்டித்துள்ளார்.

"19(2), 31-வது விதிகளைத் திருத்துவது மக்களின் அடிப்படை உரிமைகளை மேலும் பறிப்பதாகும்," என அவர் குறிப்பிட்டார்.

ஆபாசமான நூல்களையும், பிரசுரங்களையும் தடுப்பதற்கெனவே, இந்த இரு விதிகளும் திருத்தப்பட வேண்டும் என்று காங்கிரஸ் துணைக் குழு கூறுவது, இப்பொழுது நடைமுறையில் உள்ள ஆபாச அச்சுத் தடை சட்டத்தினாலேயே தடுக்க முடியுமென்றும், அதற்காக மேல் திருத்தம் தேவையில்லை எனவும் குன்சுரு எடுத்துக் காட்டியுள்ளார்.

தனி நபர் சொத்துக்களை சர்க்கார் எடுத்துக் கொள்ளும் போது, அதற்காக தரப்படும் நஷ்டஈடு பற்றி உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடுக்க அரசியல் சட்ட 31-வது விதியில் இடமிருக்கிறது. இவ்விதியைத் திருத்த விரும்புவது, உயர்நீதி மன்றத்தின் அதிகார வரம்பைக் கட்டுப் படுத்துவதாகவும், தனி நபருக்குள்ள உரிமையைப் பறிப்பதாகவும் இருக்கிறது என்று அவர் விளக்கிக் கூறி இருக்கிறார்.

அடிப்படை உரிமைகளை நிலை நாட்டுவதில், உயர்நீதி மன்றங்களுக்குள்ள தடை விதிக்கும், அதிகாரத்தையும் நீக்கிவிடக் கூடியதாக உள்ளது, காங்கிரஸ் குழுவின் சிபார்சு என அவர் இடித்துரைத்துள்ளார்!

காங்கிரஸ் அமைச்சர்களையும், சர்க்கார் உத்தியோகஸ்தர்களையும் அவர்கள் புரியும் ஊழல்களுக்காக, பத்திரிகைகள் கண்டிப்பதைத் தடுக்க வேண்டும் என கிரிமினல் சட்டத்தைத் திருத்த யூனியன் சர்க்கார் முன்வந்திருப்பது, அமைச்சர்களையும் அதிகாரிகளையும் எதேச்சாதிகாரமாகவும், ஒழுக்கக் கேடாகவும் நடக்கத் தூண்டுவதாக முடியும் எனவும் டாக்டர் கண்டித்துள்ளார்.

பிரிட்டிஷ் ஆட்சியினரும் இயற்றத் துணிவுகொள்ளாத ஒரு சட்டத்தை, காங்கிரஸ் கட்சியினர் செய்ய முன்வருவது வியப்பாக இருக்கிறது என அவர் அறிவிக்கிறார்.

அரசியல் சட்டத்தில் செய்யப்பட இருக்கும் திருத்தங்களைப் பார்த்து டாக்டர் குன்சுரு அதிர்ச்சி அடைந்திருக்கிறார்.

பிரிட்டிஷ் தளபதியின் தலைக்கு 1,000 பவுன்!

—(:)—

எகிப்து சர்க்காரின் — — அக்கால உத்திரவு

அந்தக் கிலி இன்னும் அவனைவிட்டு நீங்கவில்லை!

எகிப்தில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற உள்நாட்டுக் குழப்பத்தின்போது, ஆங்கிலத் துருப்புகளுக்குத் தளபதியாக ஜெனரல் சர் ஜார்ஜ் எரான்கின் இருந்தார்.

அவர் தலையைக் கொண்டு வருபவர்களுக்கு 1000 பவுன் தருவதாக, அப்போழுது எகிப்து சர்க்கார் அறிவித்தது.

அவர் இப்பொழுது பிரிட்டிஷ் கிழக்கு ஆப்பிரிக்காவில் தளபதியாக இருந்து வருகிறார். அவர் இலண்டனுக்கு அவசர வேலையாகச் செல்லுகிறார்.

விமான மூலம் செல்லுகிறவர், எகிப்தின் தலைநகரான கெய்ரோவில் கால் வைக்காமல் இருக்க கிரேக்கத் தலைநகரின் ஏதென்ஸ் வழியாகச் செல்லத் தீர்மானித்துவிட்டார்.

பழைய கிலியின் காரணமாகவே, அவர் தனது பிரயாணத்திற்கு இவ்வாறு திட்டமிட்டு இருக்கிறார்.

கெய்ரோவில் தாம் இறங்கினால், ஏதாவது எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் விரும்பத்தகாத விளைவுகளும் ஏற்படக் கூடும், என தளபதி எரான்கின் அஞ்சுகிறார்.

காங்கிரஸ் 'களபதி'களின் கண்ணியமற்ற செயல்!

6—6—54 காலையில் கோவில்பட்டி பஞ்சாயத்துபோர்டு பண்டாண்டிற்குமுன் தி. மு. கழகக் கொடி ஏற்றிவைக்கப்பட்டது. கழகக் கொடியின் கம்பத்திற்குப் பக்கத்தில் ஏற்கனவே வரிசையாக பிரஜா—சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட், காங்கிரஸ் கட்சிகளின் கொடிகள் பறந்துகொண்டிருந்தன.

7—6—54 காலையில் பார்க்கும் போது தி. மு. கழகக் கொடியைக் கம்பத்துடன் காணவில்லை; அடியோடு பெயர்த்து எடுத்துக் கொண்டு போய்விட்டனர். ஏற்கனவே போட்டிருந்த திட்டப்படி 'காங்கிரஸ் களபதிகள்' கழகக் கொடியை அப்புறப்படுத்தியிருக்கின்றனர்.

இச் சம்பவம் பற்றி இங்குள்ள போலீஸ் சப்-இன்ஸ்பெக்டரிடம் புகார் செய்யப்பட்டிருக்கிறது; போலீசார் விரைவில் நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியுள்ளனர். (ச. கி)

பிரிட்டிஷ் ஆயுதச் சாலையில் கொள்ளை

பல ரக துப்பாக்கிகள், தோட்டாக்கள் களவு

பெல்பாஸ்ட், ஜூன் 12—

அல்ஸ்டர் என அழைக்கப்படும் அயர்லாந்தின் வட பகுதி பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் இருந்துவருகிறது. தென் அயர்லாந்து சுதந்திரக் குடியரசாக இயங்கிவருகிறது.

இரு பகுதிகளை ஒன்றாக இணைக்க வேண்டும் என்ற கிளர்ச்சி நீண்டகாலமாக இருந்துவருகிறது. அந்த இணைப்பைத் துரிதமாக்குவதற்காக, அயர் குடியரசு சேனை என்ற பெயரில் ஆயுததாரிகளாகிய சிறு குழுவினர் உருவெடுத்துள்ளனர்.

சட்ட விரோதமான ஸ்தாபனத்தார் என அப்படையினர் தடுக்கப்பட்டுள்ளனர்.

அப்படையைச் சேர்ந்தவர் என்று சந்தேகிக்கப்பட்ட 15 நபர்கள், பிரிட்டிஷ் இராணுவ உடை அணிந்துகொண்டு பிரிட்டிஷ் இராணுவ ஆயுதச்சாலைக்குள் பட்டப்பகலில் நுழைந்து, துப்பாக்கிகளைக் காட்டி பயமுறுத்தி, ஒரு லாரி நிறைய பலரகமான துப்பாக்கிகளையும் தோட்டாக்களையும் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

பெல்பாஸ்ட் நகருக்கு 30 கல் தொலைவில் உள்ள அர்மாக் என்ற நகரத்தில் இருந்த பிரிட்டிஷ் ஆயுதச் சாலையில் தான் இக்கொள்ளை நடந்திருக்கிறது. இரண்டாவது உலக யுத்தம் முடிவுற்றதற்குப் பிறகு, இத்தகைய பகற்கொள்ளை, உலகில் வேறு எங்கும் நடைபெற்றதில்லை என நம்பப்படுகிறது.

ஆயுதங்களைக் கொள்ளையிட்டவர்களைக் கண்டுபிடிப்பதில், அல்ஸ்டர் அரசாங்கம் தீவிர முயற்சியை மேற்கொண்டுள்ளது.

வேலூரில் திராவிட முன்னேற்றக் கழக மாநாடு: ஜூன் 26—27

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 14-6-54 திங்கள்

அமைச்சர் பேசுகிறார்!

''பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் படிக்க வேண்டாம்''

என்று கூறுகிறார் அமைச்சர் பக்தவத்சலனார்.

ஆச்சாரியார் இதைவிடத் துணிவாக ஒன்று கூறினார், மூன்று-படிப்புதான் எதற்கு?-என்று !!

ஆச்சாரியார், பக்தவத்சலனாரை விட மேதை அல்லவா; அதனாலே அவர், தமது கூற்றுக்கு ஆதாரம்கூடக் காட்டினார்—ஹைதரும் திப்புவும் படித்தா, பட்டத்தரசர்களானார்கள் !—என்று கூறினார்.

இத்தகு மேதைகள் படித்து பட்டம் பெற்று, பதவிகளில் அமர்ந்து, அதற்கான சம்பளம் பணமும் பெற்று, அவரவர் குடும்பத்தைப் பொறுத்தமட்டில் அடுத்த தலைமுறை வரை காணக்கூடிய அளவு சொத்தும் சேர்த்து விட்டு, சேர்த்தது போதாதென்று இப்போதும் அதே திருத்தொண்டிலே ஈடுபட்டுக் கொண்டே இந்த அரிய உபதேசங்களை யாருக்கு அளிக்கின்றனர்.

படித்தவர், படிப்பில்லாதவர் எனும் இருசாராருக்கும், வாழ்க்கை இருக்கிறது; அந்த வாழ்க்கையில அவர்கள், பரிசைமீதேறி உலவ அல்ல—பசிப் பேயை விரட்டுமளவுக்கேனும், வசதி பெற்றாக வேண்டும்; அதற்கேற்ற அளவு வருவாய் கிடைத்தாக வேண்டும்—கிடைக்கச் செய்வதுதான் நாகரீக சர்க்காரின் கடமையாகும். அன்னியனை விரட்டியதும் அந்த நோக்கத்துடனேதான் ஆனால், அமைச்சர்களானதும், உபதேசம் செய்வதற்குத் தனியானதோர் உரிமை பெற்றுவிட்டோமெனக் கருதிக் கொண்டு, பொருளற்றன பேசிக்கொண்டு, போதி மரத்தடி அமர்ந்த புத்தபிரானுக்கு அடுத்தபடி உள்ளவர்கள் தாமே என்று எண்ணி, உலா வருகிறார்கள் ! என்னே இவர்தம் போக்கு !!

'படித்துவிட்டுப் பணம் தேடுவது பண்புக் குறைவு' —என்று பேசுகிறார் அமைச்சர்; சரி என்று ஒப்புக்கொள்வோம்—சிறிதளவு மமதைப் பெருகெறி எனச் செய்யும் அந்தச் சிலர்—படித்தாலும் படிக்காவிட்டாலும், வாழ்க்கையை நடத்திச்செல்லப் பணம் வேண்டுமே, அதற்கு சர்க்கார் காட்டும் வழி என்ன? வழி என்ன என்று படித்தவர்களாயினும் சரி, படிப்பிலாதாராக இருப்பினும் சரி, சர்க்காரைக் கேட்கக் கூடாது என்றுதானே பொருள் கிடைக்கிறது ?

மக்கள் உழைக்க வேண்டும்; ஏனெனில் உழைப்பிலே 'மேன்மை' இருக்கிறது — ஆனால், உயிர் வாழ வழி என்ன என்று கேட்கக் கூடாது ; கேட்பது, உழைப்பை விலைக்கு விற்கும் கேவலமாகும்—இதனை உபநிஷத்துக்கள் கண்டித்துள்ளன !

அங்கனமாயின், பிழைப்புக்கு வழி யாது ? பேசார் அமைச்சர் ! அதற்கா அவர் இருக்கிறார் ! அவர் பிரச்சினை அதுவா ! சேச்சே ! கிடைத்துள்ள பதவி, சுயாலீஸ்வரன் அருளால் நீடித்திருக்க வேண்டும்—அதற்கு என்ன வழி என்று யோசிப்பாரா—பத்தாண்டு படித்து, பாதி உடல் தேய்ந்து, குடும்பச் சொத்து கரைந்து, கண் பார்வை மங்கி, வேலை உண்டா, வேலை உண்டா, என்று தேடித் திரியும் படித்த வாலிபனைப் பற்றியும், பாடுபடுகிறேன் பகலென்றும் இரவு என்றும் பாராமல் - உழைக்கிறேன் உருக்குலைந்து போகிறேன் - வாழ்க்கைக்குத் தேவையான வருவாய் கிடைக்கவில்லையே என்று வேதனைப்படும் பாட்டாளியைப் பற்றியும் கவனித்துக் கொண்டிருப்பாரா ?—அவர் அமைச்சர் ஆனது, இதற்கா ! எவ்வளவு துணிவு இந்த மக்களுக்கு !!

அதனால்தான் அமைச்சர் கேட்கிறார்—யார் உங்களைப் படிக்கச் சொன்னது—ஏன் படிக்கும்போது பணம் சம்பாதிக்கும் நோக்கத்துடன் படித்தீர்கள்—என்று கேட்கிறார்.

படித்தவர்களுக்கும் சரி, படிப்பில்லாதவர்களுக்கும் சரி என்னால் வேலை தர முடியாது—என்று கூறுவதைத்தான், வேறு மொழியில், முறையில், அமைச்சர் கூறுகிறார்.

வேலை தேடித் தருவது என்ன சாமான்யமா—பாபம் ! இந்த அமைச்சர் வேலையைத் தேடிப்பெற, அவர் பட்டபாடு கொஞ்சமா !!

அப்படி இருக்க, அவரைப் போய்த் தொல்லை கொடுக்கிறார்களே, மக்கள் !

படித்தாலும் வேலை இல்லை; உழைத்தாலும் போதுமான கூலி இல்லை ; இரண்டையும் கவனிக்க எங்களுக்கு நேரமில்லை—என்று அமைச்சர்கள் கூறிவிட்டால், மக்கள் கதிதான் என்ன ஆவது என்கிறீர்களா ?

ஆச்சாரியாரைக் கேளுங்கள் - தெளிவாகக் கூறுவார்—வாழ்வாவது மாயம் ! மண்ணாவது திண்ணம் !!—என்று !

இப்படிப் பேசிக்கொண்டு ஒரு கட்சி இருக்கிறதே என்கிறீர்கள்; ஆமாம்; இருக்கிறது—என்ன செய்ய முடிகிறது, உங்களால ? நீங்கள் தோற்கடித்தவர்களைக் கூட்டித்தான் காட்டினீர்கள்

பணம் தேட எண்ணிப் படிக்காதீர்கள் — என்கிறார் ஒரு உபதேசம்.

கூலி போதவில்லை என்று சதா குறை கூறாதீர்கள்—என்று மற்றொரு உபதேசம்.

உழைப்பின் மேன்மையை அறிந்து ஒழுகுங்கள்—என்று பிறிதோர் உபதேசம்.

இங்ஙனம் பல்வேறு உபதேசங்களையும் அமைச்சர்கள் அருளுகிறார்கள் — மொத்தத்திலே பார்க்கும்போது, வாழ

இதே பக்தவத்சலனாரை—ஆனால் பார்த்தீர்களல்லவா, மந்திரியாகிவிட்டார் !! அம்மட்டிப்பட்ட அசகாயசூரரிடம் போய் மக்கள் என்ன செய்ய முடியும் !

மற்ற எந்த நாட்டு மந்திரியும் இப்படிப் பொருளற்றும் பொறுப்பற்றும் பேசமாட்டார்கள்; ஏனெனில், அங்கு, மக்களுடைய ஜனநாயக சக்தி வளமாக இருக்கிறது. இங்கு ?—இங்கா ! இங்குதான் ஜனநாயகம், மதிப்பற்றதாகிக் கிடக்கிறதே !

அளியும் இரக்கமற்று, கடுகளவு பொறுப்புணர்ச்சியுமற்று இப்படிப் பேசுகிறாரே, நியாயமா—என்று கேட்பீர்கள்; அமைச்சர் ! பேசுகிறார் !!—என்பதன்றி வேறென்ன பதில் கூற முடியும் !

இப்படி ஒரு அமைச்சர் பேசுகிறாரே—என்று கூறுவீர்கள் ; ஆச்சரியம் அதிலே இல்லை — இப்படிப்பட்டவர் அமைச்சராக இருக்கிறாரே, அதிலல்லவா ஆச்சரியமிருக்கிறது !

ஓரே மகாராஷ்டிர நாடு வேண்டும்

சம்யுக்த மகாராஷ்டிர பரீஷத் கோரிக்கை

ஐதராபாத் இப்போது மத்திய கால பிரபுத்வ முறையின் இருப்பிடமாகத் திகழ்கிறது ; வகுப்பு வெறியும், பாசிச இராணுவ அமைப்பையும் வளர்க்கும் தற்போதைய ஐதராபாத், ஜனநாயகக் கொள்கைகளுக்கு விரோதமானதாகும். ரசாக்கர்களின் பிடியில் சிக்கிய ஐதராபாத், தட்சண கலாச்சாரத்தை வளர்க்கிறது என்று கூறுவது தவறாகும்.

ஆகவே, ஐதராபாத்தைப் பிரிக்க வேண்டுமென்றும், பம்பாய், மற்றும் இதர மகாராஷ்டிர நாடுகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து, ஒரே மகாராஷ்டிர நாடு அமைக்க வேண்டுமென்றும் ராஜ்யப் புனரமைப்புக் கமிஷனிடம் சம்யுக்த மகாராஷ்டிர பரீஷத் அறிக்கை ஒன்றைத் தந்தது.

மகா விதர்ப்பம் என்ற தனி மகாராஷ்டிர நாடு கேட்பதையும் அந்த அறிக்கை கண்டிக்கிறது.

ஆசிரியரான 'அனுமார்'

ஆசிரியர் கன்னத்தில் அடையாளமிட்டது !

அனுமாரை ஒடுக்க போலீசார் உதவி

சின்னூர், ஜூன் 12—ஆரம்பப் பள்ளிக்கூட வகுப்பொன்றில் குரங்கு ஒன்று உள்ளே நுழைந்து கலகம் விளைவித்து ஆசிரியரை வெளியே துரத்தி, தானே ஆசிரியரின் நாற்காலியில் அமர்ந்து கொண்டதாம் !

பள்ளிக்குள் நுழைந்த குரங்கு ஆறு மாணவர்களைக் கடித்து ஆசிரியரைத் தாக்கி, அவர் முகம் முழுவதும் பிராண்டி பலிகாய மேற்படுத்தியது.

மாணவர்கள் இக் குரங்கின் தொந்தரவைக் கண்டு பயந்து அலறி பள்ளிக்கு வெளியே ஓடினர் பின்னர் குரங்கைப் பிடிக்கப் போலீசார் வரவழைக்கப்பட்டனர்

போலீசார் குரங்கைப் பிடித்தனர் எனினும், அன்று முழுமையும் வகுப்புகள் நடைபெறுமல் ரத்து செய்யப்பட்டன.

ஆச்சாரியார் திட்டத்தை ஆந்திரா ஒழித்தது!

ஆய்வுக் குழுவின் தீர்ப்பை ஆராய்ந்து கூற ஆச்சாரியார் மறுப்பு

ஆந்திர மாநிலக் கல்வி மந்திரி திரு பட்டாபி ராமராவ், ஆச்சாரியாரின் புதிய ஆரம்பக் கல்வித் திட்டத்தைக் கைவிட, ஏகமனதாக சிபாரிசு செய்திருக்கு குப்புசாமி கல்வி ஆய்வுக் குழுவின் அறிக்கையை, ஆச்சாரியாருக்கு அனுப்பி வைத்திருந்தாராம்—அவரின் கருத்தை அறிவிக்கக் கோரி ! ஆனால், ஆச்சாரியாரோ, அந்த நிபுணர் குழு தன் கல்வித் திட்டத்தின் மீது செய்த முடிவு பற்றிய அறிக்கை குறித்து தன் கருத்தை அறிவிக்க மறுத்துவிட்டாராம்.

ஆந்திர மாநிலத்திலும், ஆச்சாரியாரின் புதிய ஆரம்பக் கல்வித் திட்டம் புதை குழிக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

ஆந்திர அரசு நியமித்த குப்புசாமி கல்வி ஆய்வுக் குழு உடன் ஆச்சாரியாரின் திட்டத்தைக் கைவிடு விரைமாக, ஏகமனதாக சிபார்சு செய்திருந்தது.

கோவாவில் போலீஸ் படை அதிகரிப்பு

விடுதலைப் போரை அடக்க ஏற்பாடு

போர்ச்சுகீசிய சர்க்கார் சென்ற சில வாரங்களாகப் போலீஸ் படைக்கு ஏராளமாக ஆள் சேர்க்கின்றனர் என்று தெரிகிறது

இந்தியவுடன் கோவா இணைய வேண்டுமென்று கோருபவர்களின் பலம் அதிகரிப்பதாலேயே இந்த ஏற்பாடு என்று தெரிகிறது.

இப்போது போலீஸ் படைக்கு சேர்க்கப்படுவோர், போலீஸ் கமிஷனரின் நேரடிப் பார்வையில் பயிற்சி அளிக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

தகுதியில்லாதவருக்கு இடம் ஒதுக்கியது ஏன் ?

மாணவர் கிளர்ச்சி

பெப்சு மாநிலத்தில், பாட்டியாலா மருத்துவக் கல்லூரியில் நான்கு இடங்களை சர்க்கார் ஒதுக்கி வைத்துக் கொண்டிருப்பதை எதிர்த்து 500 மாணவர்களுக்கு மேல் கிளர்ச்சி செய்தார்கள் என்ற செய்தி வெளிவந்ததல்லவா ?

நான்கு இடங்களையும் சர்க்கார் "தகுதியற்ற மாணவர்"களுக்குத் தருவதற்காக ஒதுக்கி வைத்திருப்பதை மாணவர்கள் எதிர்க்கின்றனர் என்று தெரிகிறது.

"தகுதியற்ற மாணவர்களை"த் தான், சர்க்கார், தான் விரும்பும் மாணவர்கள் எனக் குறிப்பிடுவதாகத் தெரிய வருகிறது.

'ஒரிசா நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டும்'

சட்ட சபை எதிர்க் கட்சியின் தீர்ப்பும்—உறுதியும் !

"ஒரிசாவின் நலன்கள் பூரணமாகப் பாதுகாக்கப் படாலன்றி, ஒரிசாவில் வறுமை ஒழிய பலனுள்ள பரிகாரம் எதுவும் காண இயலாது ; அந்த வறுமையை ஒழிக்க மாநில இயக்கமாகப் பாடுபட எங்கள் கட்சி நிர்மாணித்துள்ளது,"

இவ்வாறு தோழர் பிரதாப் கேசரி, தேவ ராஜ்... ஒரிசா சட்டசபையில் மிகப் பெரிய எதிர்க் கட்சியான கணதந்திர பரிஷத் ... கட்சியின் மூன்றுவது வருடாந்திரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

குலக் கல்வித் திட்டம் ஒழிப்பு

நாடெங்கும் வெற்றிவிழா

★

வீரக்கவுண்டனூர் :

5—6—54 மாலை ஊர்வலமாகச் சென்று, பின்னர், தோழர் அண்ணாமலை தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் பச்சமுத்து சொற்பொழிவாற்றினார். முடிவில் பொது மக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

இராசிபுரம் :

5-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் 6—6—54ல் தோழர் எஸ். ஏ. சிதம்பரமன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் ஏ. கோவிந்தசாமி, வி. சுந்தரம், வே. வேலுசாமி, திருமலைசாமி ஆகியோர் பேசியபின் கல்வி திட்ட ஒழிப்புக்கு மகிழ்ச்சி தெரிவித்தும், தோழர் குமாரவேல் மரணத்திற்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கொண்டயம்பட்டி :

31—5—54ல், தோழர் க. துரைசாமி தலைமையில் தி. மு. கழகச் சார்பில் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. தோழர்கள் சேர. வெள்ளைச்சாமி, சு. வெ. ரா. மலைச்சாமி ஆகியோர் பேசினர். இறுதியில் சிறுவர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

பெத்தம்பட்டி :

1—6—54-ல் தி. மு. கழகச் சார்பில் வெற்றி விழா ஊர்வலம் நடத்தப்பட்டது; சிறார்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

ஜி. கல்லுப்பட்டி :

7—6—54-ல் தி. மு. கழகச் சார்பில் தோழர் கா. சோ. பழனிசாமி தலைமையில் ஊர்வலம் நடைபெற்றது. தோழியர் எம். சுப்புலட்சுமி அம்மையார் வீட்டில் பலருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

செஞ்சுருள் நடை :

28-5-54ல் வெற்றி விழாவை முன்னிட்டு புதுமை மாதவராம், செஞ்சுருள்நடை தோழர் எம். ... அவர்கள், ஜி. என். கே. ... தன்னுடைய கல்யாண ... சாலையில், சிறார்களுக்கு தின்பண்டமும், பெரியவர்களுக்குத் தேனீரும் வழங்கினார் ; அவர் மாலை விளக்குகள் அலங்காரமும் செய்யப்பட்டது.

க. புதுப்பட்டி

4—6—54-ல் கழக சார்பில் சுமார் 450 பள்ளி மாணவ மாணவிகளுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

தாராபுரம்

தி. மு. கழகச் சார்பில் சன்... மைதானத்தில் ... தோழர் வே. சே. சாமி தலைமையில் நடைபெற்ற வெற்றி விழாவில், தோழர்கள் மேத்தா, மதுரை - எஸ். முத்து ஆகியோர் பேசினார்.

கழகச் செய்திகள்

பெங்களூர் அக்கிபேட்டை தி. மு. கழகம்

6—6—54 காலை 10 மணிக்கு கழகப் பேச்சு மன்றத்தின் சார்பில், தோழர் ஆர். ஆறுமுகம் தலைமையில் 'வடக்கும் — தெற்கும்' என்ற தலைப்பில் பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

தாணு (பம்பாய்) தி. மு. கழகம்

3—6—54-ல், கழகச் செயற்குழு கூட்டம் தோழர் பி. டி பாண்டியன் தலைமையில் நடைபெற்றது. பொருளாளர் தோழர் டி. எஸ். பெருமாள் விலகல் கடிதம் ஒப்புக் கொள்ளப்பட்டதுடன், சென்னை அமைச்சர் எஸ். எஸ். ராமசாமியின் போக்கைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. புதிய கல்வித் திட்டம் ஒழிப்புக்காக இனிப்பு வழங்கப்பட்டது.

ஆமதாபாத் தி. மு. க.

30—5—54 மாலை 6 மணிக்கு கழகச் சார்பில் மேதின விழாக் கூட்டம் தோழர் பொ. வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் சண்முகநாதன் ஆர். டி. சலம், தி. செமோறன், பி. வி. இராமசாமி. டி. பி பாலகிருட்டிணன் சொற்பொழிவாற்றினர்.

* * *

மாலை 7-15 மணிக்கு புதிய கல்வித் திட்ட வெற்றி விழா தோழர் அ. வடிவேலு தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ந பெருமாள், ஆர். டி. சலம், சு மதுரை செழியன் சொற்பொழிவாற்றினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

நான்குனேரி தி. மு. க.

28—5—54ல், தோழர் வெ. தாமரைச்செல்வன் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, கழக முதலாவது ஆண்டு விழாவை ஜுன் 20-ல் நடத்துவதென்றும், மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

சமயநல்லூர் தி. மு. க.

30—5—54ல், சமயநல்லூர் சுற்று வட்டார கிளைக் கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் கொண்ட கூட்டம் ஒன்று தோழர் ஏ. கே. என் சாமி இல்லத்தில் நடைபெற்றது. அதுபோது தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டதுடன், மதுரை வட்டாரக் குழுவிற்கு (சமயநல்லூர்) சுற்று வட்டாரத்திற்கு வட்டாரச் செயலாளராக ஏ. என். கே. சாமிஐயாயும், கே பி. முத்து (பொதும்பு) துணைச் செயலாளராகவும், இரா. சந்திரன் (பரவை) உதவியாளராகவும் தற்காலிகமாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வேப்பம்பட்டு தி. மு. க.

15—5—54 காலை 7 மணிக்கு கழகச் சார்பில் தோழர் கந்தசாமி தலைமையில் ஊர்வலம் வந்து கொடியேற்று விழா நடத்தப்பட்டது. பின்னர் தோழர் மு. கந்தசாமி தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர். முப்பலி நிறுத்தம் மேற்படி ஊரில் அறுவகாணத்தம்மன் திருவிழாவில் வழக்கமாக எருமை, ஆடு, கோழி பலியை 24—5—54-ல் தி. மு. கழகத்தாரால் பல பெரியோர்களின் ஆதரவில் நிறுத்தப்பட்டது என சேத்துப்பட்டு தோழர் சா. கோவிந்தன் தெரிவிக்கிறார்.

உறந்தை தி. மு. கழகம்

5—6—54ல் நடைபெற்ற பொதுக் குழு உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் வி. எஸ் குமரவேல், சங்கரன், முத்தமிழ்வள்ளல் அருளானந்தசாமி, உறையூர் அந்தோணிசாமியின் தாயார் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டதுடன், மற்றும் பல முக்கிய முடிவுகள் சில செய்யப்பட்டன.

சூரப்பள்ளி தி. மு. க.

31—5—54 இரவு 8 மணிக்கு செயலாளர் கு. சி கந்தசாமி தலைமையில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. தோழர் ப செல்லப்பன் மாவட்டப் பிரதிநிதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், மந்திரி பதவி ஏற்ற எஸ். எஸ். இராமசாமியின் போக்கைக் கண்டிக்கப்பட்டும், வரவு—செலவு கணக்குகள் சரி பார்க்கப்பட்டது.

கீழப்பாவூர் தி. மு. க.

இவ்வூர் தி. மு. கழகம், பாண்டியன் மைதானத்தில் ரேடியோ ஒன்றை அமைக்குமாறு பஞ்சாயத்தாரைக் கோரியும், இயக்க சம்பந்தமான பல முக்கிய முடிவுகள்செய்தும் தீர்மானங்கள் நிறைவேற்றியது.

நாகை தி. மு. கழகம்

27—5—54 இரவு 10 மணிக்கு கழகக் கட்டிடத்தில் தோழர் சு. கே சித்திரவேலு தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, பொதுக் கூட்ட வரவு—செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு ஒப்புக் கொள்ளப்பட்டது ஜுலை திங்களில் கலா நிகழ்ச்சி நடத்துவதெனவும், கழகக் கட்டிடத்தில் சொற்பயிற்சி வகுப்பு நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

பாளையங்கோட்டை தி. மு. கழகம்

6—6—54-ல் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—கிருட்டிணன்—செயலாளர்; பே. நாராயணன்—துணைச் செயலாளர்; இரா, சாமி—பொருளாளர்; சு. மீ அபிசேக் மன்சூர் பாலவேலன், தங்கையா ஆரோன் ஆகியோர் மாவட்டக் கழகப் பிரதிநிதிகளாகவும், 5 பேர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாப்பநாய்க்கன்பாளையம் தி. மு. கழகம்

1—6—54-ல் தோழர் என். ஆர். மாணிக்கம் தலைமையில் நடைபெற்ற உறுப்பினர்கள் கூட்டத்தில், தோழர்கள் பி. கே. இராமச்சந்திரன் செயலாளராகவும், தோழர் ஆர். நல்லதம்பி பொருளாளராகவும், என் ஆர். மாணிக்கம் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அன்னதானப்பட்டி தி. மு. கழகம்

சேலம், மே 31—

23—5—54 மாலை 4 மணிக்கு தோழர் என். ஆர். தாஸ் தலைமையில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, புதிய கல்வித் திட்ட ஒழிப்புக்கு சென்னை முதலமைச்சருக்கு நன்றி செலுத்தியும், கழக 3-வது ஆண்டு விழாவை 20—6—54ல் கொண்டாடுவதெனவும், வரவு-செலவு கணக்குகள் ஒப்புக்கொள்

தி. மு. கழகங்கள் துவக்கம்

★

துவரங்குரிச்சி (மூக்குட்டுசாலை)

2—6—54ல், இவ்வூரில் தி மு. கழகக் கிளை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. தோழர்கள் க. கணபதி செயலாளராகவும், சி கணேசன் துணைச் செயலாளராகவும், அரெங்க. இராவணன், பொருளாளராகவும், இரா. வீரப்பன் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அன்று இரவு 8 மணிக்கு தோழர் டி. வி எஸ். வீரப்பன தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது தோழர் கருணாநிதி கொடியேற்றுவித்தார். பொதுக் கூட்டத்தில் தோழர்கள் மு கருணாநிதி, என். எஸ். இளங்கோ, எஸ் எஸ் ராஜேந்திரன், அரெங்க. இராவணன் மற்றும் பலரும் சொற்பொழிவாற்றினர். இக்கூட்டத்தின் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு அனுப்பப்பட்ட ரு. 2-ம் வரப்பெற்றோம்—நன்றி. (ஆ-ர்)

★

புசங்காராயநல்லூர்

பெரம்பலூர், ஜுன் 10—

6—6—54 இரவு 7 மணிக்கு கழகத் துவக்க விழா தோழர் அ சுப்பையா தலைமையில் நடைபெற்றது தோழர்கள் பெ. குழுவளி, மா. தங்கராசன், தோழியர் பொற்செல்வி- இ. முருகு, டி கே திராவிடமணி, சுப்ரமணியம், கரீம் பி. ஏ., மீ சு இளமுருகு ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. இதன் நினைவாக 'நம்நாடு' வளர்ச்சிக்கு ரு 1 அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம் — நன்றியுடையது- பொறுப்பாளர்.

வெம்பூர்

31—5—54-ல், வெம்பூரில் தி மு கழகத் துவக்க விழா நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: வி. ஏ இராமன்; துணைச்செயலாளர்: மு. பாலையா; பொருளாளர்: டி. எஸ். ராமசாமி; மாவட்டப் பிரதிநிதி: வாழ. சிவசுப்பிரமணியம்; செயற்குழு உறுப்பினர்கள்: எஸ் தமிழரசன், என். சிவராமன், ஈ ஏ. அரசகுமார், பி. பொன்ராசு, உ. வெள்ளைசாமி, வாழவந்தான், க. துரைசாமி.

★

காடாந்தகுடி

30—5—54 மாலை தோழர் கோவிந்தராசன் இல்லத்தில், தோழர் ராம. கணபதி அவர்களால் தி மு. கழகம் துவக்கி வைக்கப்பட்டது. செயலாளர்: வெ. கோவிந்தராசன்; துணைச் செயலாளர்: தி விசுவநாதன்; பொருளாளர்: ப ராமன்; மாவட்டப் பிரதிநிதி: தி சாமிக்கண்ணு; மற்றும் ஐந்து பேர்கள் கொண்ட செயல் கமிட்டி அமைக்கப்பட்டது.

★

திட்டை (சீர்காழி)

25—5—54 தோழர் க அன்பழகன் முன்னிலையில் தி மு கிளைக் கழகம் துவக்கப்பட்டது தோழர்கள் பாலகுருசாமி, அறிவுடைநம்பி ஆகியோர் பேசினர் செயலாளராக மு. வெங்கடாசலம், துணைச் செயலாளராக ப. குஞ்சிதபாதம், பொருளாளராக ப. சந்தானம், மாவட்டப் பிரதிநிதியாக தோழர் க. மாரியப்பன் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தி. மு. கழகப் பொதுக் கூட்டங்கள்

★

வேதாரணியம்

5—6—54 மாலை 5 மணிக்கு கீழ வீதியில், தோழர் ச. வெ. கனகசுந்தரம் தலைமையில் கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, தோழர் இரா. நெடுஞ்செழியன் கழகக் கொடியை யேற்றிவைத்து, இயக்கக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினார்.

★

கீழநம்பங்குறிச்சி

5—6—54 மாலை 6 மணிக்கு வள்ளுவனூர் திடலில் கழகப் பொதுக் கூட்டம் தோழர் ஆர். எம். சிவந்தையன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் க. தருமலிங்கம், இரா. நடராசன், கலியபெருமாள், அடைக்கலம், என்.

ளப்பட்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

குரும்பூர் தி. மு. க.

5—6—54 கழகச் சார்பில் ஓர் பொதுக் கூட்டம் தோழர் திரவியம் தலைமையில் நடைபெற்றது தோழர்கள் மகாராசன், சாலமோன், ஐசக், மணிமொழியன் ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர். பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆலக்குடிமுனை தி. மு. க.

3—6—54 மாலை கண்ணகி திடலில் கழகச் சார்பில், ஓர் பொதுக் கூட்டம் தோழர் ஆர். ராசகோபால் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மு கருணாநிதி, என். எஸ். இளங்கோ எஸ். எஸ். இராசேந்திரன் எம். ஆர். முருகையன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

திருவொற்றியூர் தி. மு. க.

29—5—54 மாலை 6 மணிக்கு நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், கழகத்திற்குப் புது உறுப்பினர்களை சேர்ப்பதென்றும், 1—6—54 முதல், கழக ஏடுகள் பல கழகத்திற்கென, தோழர்கள் பலரால் நன்கொடையாக அளிப்பதென இசைவு தெரிவிக்கப்பட்டும், விளம்பர உறுப்பினராக தோழர் ஆர். தீனதயாளன், தேர்ந்தெடுக்கப்பட்டும், ஜுன் மாதத்தில் கழகப் பொதுக் கூட்டம் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

தரும்பூர் தி. மு. கழகம்

21—5—54-ல் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில் புத்தாண்டு நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: மு தங்கராசு; துணைச் செயலாளர்: க. பாண்டியன்; பொருளாளர்: த. சர்க்கரை; மாவட்டப் பிரதிநிதி: பி. ரத்தினசாமி: விளம்பர உறுப்பினர்கள்: இரா. தங்கராசு, சி. சித்திரைப்பாண்டி.

சேதவத்தை தி. மு. க.

இலங்கை, ஜுன் 11—

6-6 54 மாலை 5-30 மணிக்கு, தோழர் என். கதிரவன் தலைமையிலும், இரா. அதி மணி முன்னிலையிலும் நடைபெற்ற பொது கழக நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

செயலாளர்: பி. என். சேரன்; துணைச்செயலாளர்: டி. இராசன்; பொருளாளர்: எம். தேவசகாயம்; செயற்குழு உறுப்பினர்கள்: மகாதேவன், பி. என் சங்கலிங்கம், கலைமணி, க. செல்லையா, என். ரபீந்தன், எம். என். அப்பாஸ், இன்பவேல், சிவராசா, என் கே. பழனி, அந்தோணி; மத்திய குழு உறுப்பினர்கள்: டி இராசன், ச. செல்லையா.

எஸ். இளங்கோ, மு. கருணாநிதி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

★

கொடுமுடி

2—6—54 மாலை 5 மணிக்கு தஞ்சாவூர் நடராசன் தலைமையில் எல்லையிலிருந்து தோழர் கே. பி. எஸ். ஆர். கணேசன் நாதஸ்வர இன்னிசையுடன் ஊர்வலமாக வந்து தோழர் வி. கே. ராசு தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. பி. சிற்றரசு, ஈ. வே. கி. சம்பத், எஸ். அப்பாவு சொற்பொழிவாற்றினர். இறுதியில் தோழர் சம்பத் அவர்களால் கழகச் சார்பில் கே. பி. எஸ். ஆர். கணேசன் அவர்களுக்கு ஓர் பதக்கம் அளிக்கப்பட்டது.

★

அன்னமங்கலம்

31—5—54ல் செந்துறை வட்டம் அன்னமங்கலத்தில் தி. மு. கழகச் சார்பில், ஆர். பாலகுருசாமி தலைமையில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் என். வி. நடராசன் அவர்கள் புதுக் கல்வித் திட்டம் ஒழிந்தது பற்றியும், தோழர் எஸ். எஸ். ராமசாமி மந்திரி சபையில் இடம் பெற்றதைக் குறித்தும் பேசினார். பின்னர் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., பேரவையில் உறுப்பினர் கட்சித் தலைவர் ஆரம்பமுதல் செய்த சதியை மக்களுக்கும் புரியும்படி விளக்கிப் பேசினார்.

பின்னர் எஸ். எஸ். ராமசாமி மந்திரி சபையில் மந்திரியானதைக் குறித்து கண்டித்து ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

★

வெஞ்சமடை

26—5—54 மாலை 7 மணிக்கு உமையம்பேட்டையில் தோழர் சேர. பேரையன் தலைமையில் தோழர்கள் ப. நாராயணன், சோலை செழியன், மதுரை எஸ். முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

★

இடைப்பாடி

26—5—54ல் இடைப்பாடி தி மு கழகச் சார்பில், தோழர் அங்கமுத்து தலைமையில்பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள் விரிவுரையாற்றினார்.

சிரம்பூர்

24—5—54 மாலை தோழர் தி. கிருஷ்ணசாமி தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர் இரா. செழியன் அவர்கட்கு சிரம்பூர் ஊராட்சி மன்றத்தாரால் வரவேற்பிதழ் வாசித்தளித்து மலர் மாலை சூட்டப்பட்டது! துறையூர் தி. மு. கழகச் சார்பாகவும் மலர் மாலை அணிவிக்கப்பட்டது. சிரம்பூர் தி. மு. கழகச் சார்பில் 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரு. 31ம் 'மன்றம்' வளர்ச்சிக்கு ரு. 20ம் ஆக ரு 51-ம் தோழர் செழியன் அவர்களிடம் தரப்பட்டது.

அடுத்து தோழர் செழியன் அவர்கள் ஊராட்சி மன்றத்தார்க்கு நன்றி தெரிவித்துவிட்டு, நீண்டநேரம் விரிவுரையாற்றினார்.

★

தவுட்டுப்பாளையம்

தவுட்டுப்பாளையம், மே 27—

இவ்வூர் தி. மு. கழகச் சார்பில் ஒரு பெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் டி. பி. மூர்த்தி தலைமையில் தோழர்கள் ராசு, டி. பி. சிற்றரசு ஆகியோர் பேசினர்.

உலக அரங்கில்

சியோல் :
தென்கொரிய மந்திரி சபையின் இரண்டு அமைச்சர்கள் தங்கள் இராஜிநாமாவைச் சமர்ப்பித்தனர். ஏற்கனவே முதல் அமைச்சர் பைக்சேன் இராஜிநாமா செய்துவிட்டார். சிங்மன் ரீ வேறு ஒரு மந்திரி சபையை நியமிப்பார் என்று தெரிகிறது.

* * *

தென் கொரியாவில் பண வீக்கம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. தென் கொரிய நாணயத்தின் மதிப்பைக் குறைக்க அமெரிக்கா முயற்சிக்கிறது என்ற வதந்திகள் ஏராளமாக உலவுகின்றன.

★

ஜினீவா :
ஐ. நா. சபையின் சார்பில் கொரியப் போரில் கலந்து கொண்ட 16 நாடுகள் தங்களுக்குள் கூடிப் பேசி கொரியா பற்றி ஜினீவாவில் நடைபெறும் பேச்சு வார்த்தைகளை முடிக்க வேண்டுமென்று அறிக்கை ஒன்று தயாரிப்பார்கள்.

* * *

லாவோஸ், கம்போடியா பகுதிகளில் வியட்மின் துருப்புகள் படையெடுத்தது பற்றி ஐ. நா. சபையிடம் புகார் செய்யவேண்டியது நியாயமானதும் பொருத்தமானதும் ஒத்த செயலுமாகும் என்று ஆஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர் கேசி கூறினார்.

★

மாஸ்கோ :
எவரஸ்ட் வீரர் ஜான் ஹண்டுக்கு சோவியத் மலையேறுவோர் சங்கத்தின் சார்பில் சோவியத் நாட்டின் மிகப் பெரிய கௌரவப் பட்டங்களில் ஒன்றான 'ஆல் பினிஸ்ட்' என்ற பட்டம் வழங்கப்பட்டிருக்கிறது.

★

லண்டன் :
மலேயாவில் தேர்தல் நடைபெறுவதை ஒத்திப் போடுவதால் பயன் ஏதும் இல்லை என்று பிரிட்டன் காலனி இலாகா அமைச்சர் லிட்டில்டன் கூறினார்.

● ● ●

ஆயுத ஒழிப்பு பற்றி லண்டனில் நடைபெறும் இரகசியப் பேச்சு வார்த்தைகள், மேற்கு, கிழக்கு நாடுகளின் பிரதிநிதிகளிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேற்றுமையின் காரணமாகத் தடைப்பட்டிருக்கிறது.

★

மாஞ்செஸ்டர் :
நைஜீரியரான வசமன் ஒருவர் ஜூடு என்பவர், தனது ஓட்டலில் கருப்பர்கள் உள்ளே நுழையக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார். உள்ளே வருகிற கருப்பர்கள் கலகம் செய்கிறார்கள் என்று அவர் குற்றம் சாட்டுகிறார். 'கருப்பர்கள் உள்ளே வரக்கூடாது' என்கிற அறிவிப்பு ஒன்று ஓட்டலின் வெளியே தொங்குகிறது.

★

கலிபோர்னியா :
கம்யூனிச எதிர்ப்புக்கு உதவும் முறையில் அமெரிக்கா ஆசிய நாடுகளை ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறது என்று அமெரிக்க உதவி ஜனாதிபதி நிக்சன் கூறினார்.

★

டமாஸ்கஸ் :
சிரிய அரசியல் நிலையில் மாறுதல் ஏதும் ஏற்படவில்லையாதலால் இரண்டு நாட்களாக சிரியாவின் சர்க்கார் ஏதும் அமைக்கப்படவில்லை.

★

ஹனோய் :
தனியிடம் உள்ள சரணடைந்த 267 வியட்மின் துருப்புகளை விடுவிக்கத் தயார் என்று பிரெஞ்சு இராணுவத் தலைமைக் காரியாலயம் அறிவித்தது.

பாரிஸ் :
ஜோசப் லேனியலின் மந்திரி சபை இராஜிநாமா செய்துவிட்டதால் பிரான்ஸில் வேறு ஒரு மந்திரி சபையை அமைக்குமாறு இடதுசாரிக் கட்சியைச் சேர்ந்த பியர்மென்டஸ் பிரான்ஸை பிரெஞ்சுக் குடியரசுத் தலைவர் கேட்டிருக்கிறார்.

★

ஹாங்காங் :
ஆர். ஏ. எப். விமானமொன்று பயிற்சிக்காகப் பறக்கும்போது கடலில் வீழ்ந்துவிட்டதாக அறிவிக்கப்படுகிறது. விமானமோட்டி காணப்படவில்லை.

★

வாடிகன் நகரம் :
போப் ஆண்டவர் ஆயிரக்கணக்கான மக்களிடையே நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் ஐந்து மத குருமார்களை நியமனம் செய்தார்.

★

டோக்கியோ :
ஜப்பானியர்கள் மேற்கத்தி நாடுகள் மீதும், குறிப்பாக அமெரிக்க மக்களின் மீதும் வெறுப்படைந்து இருக்கின்றனர் என்று டோக்கியோ செய்தி ஒன்று கூறுகிறது.

★

அங்காரா :
பாகிஸ்தான் பிரதம மந்திரி முகமது அலி அங்காராவில் உள்ள ஆப்கன் தூதுவரைச் சந்தித்தார். பாக்.-ஆப்கன் எல்லைத் தகராறு பற்றி அவர் பேசியிருப்பார் என்று நம்பப்படுகிறது.

★

வாஷிங்டன் :
ஜெனீவா பேச்சுக்களை உடனே நிறுத்த வேண்டுமென்று ரிப்பப்ளிகன் கட்சி செனட்டரான வில்லியம் நோலந்து கேட்டுக் கொண்டார். கம்யூனிசப் பிரச்சாரத்திற்கே அந்தப் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன என்பது அவர் கூற்று.

★

யார்க்ஷயர் :
ஜினீவா மாநாட்டில் நம்பிக்கை ஏதும் காணப்படவில்லை என்று பிரிட்டனின் தொழிற் கட்சித் தலைவர் அட்லி பெண்கள் விழா ஒன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

★

லீவார்டன் (ஹாலந்து) :
ஹாலந்து சயாமிய இரட்டையர்களான பேரக்ஸ் நிஜ்லே டி லைரன் இரண சிகிச்சை மூலம் பிரிக்கப்பட்டனர். ஆபரேஷன் நடைபெற்ற 16 மணி நேரத்திற்குப் பின்னரும் குழந்தைகள் நலமாயிருக்கின்றன.

★

தெஹ்ரான் :
இரானிய எண்ணெய் பிரச்னை சம்பந்தமாக சீக்கிரமே ஒரு நல்ல முடிவு ஏற்படுமென்று நம்புவதாக ஈரானின் வெளிநாட்டமைச்சர் அப்துல்லா கூறினார்.

★

நியூயார்க் :
அணுசக்தியின் சமாதான கால ஆக்க வேலைகள் பற்றிச் சொற்பொழிவாற்றப் பதினேழு நாடுகளின் நிபுணர்களை சமீபத்தில் நடைபெறப் போகும் தேசியத் தொழில் மாநாடுக்கு அழைத்திருப்பதாகத் தெரிகிறது.

★

டெல் அவீவ் :
பிரிட்டனும் அமெரிக்காவும் இஸ்ரேல் நாட்டுக்கு ஆயுதங்களை அனுப்ப விரும்பவில்லை என்று பிரிட்டிஷ் தொழிற்கட்சியின் தலைவரும், காமன்ஸ் சபையின் எதிர்க்கட்சியின் உபதலைவருமான ஹெர்பர்ட் மாரிசன் கூறினார்.

செய்திக்கதிர்

மாணவர் கிளர்ச்சி
கிழக்கு வங்கத்தில் பார்லிமெண்டரி ஆட்சி அமுல் செய்யப்பட வேண்டுமென்று கோரி டாக்கா ஜெகநாத் கல்லூரியில் உள்ள மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லாமல் ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்தனர். கிளர்ச்சி மிகவும் கண்ணியத்துடன் நடைபெற்றதாம்.

★

நில வினியோகம்
ஆந்திராவில் நிலமில்லாத ஏழைகளுக்கு சாகுபடிக்கு உபயோகம் ஆகுமாறு உள்ள $13\frac{1}{2}$ லட்சம் ஏக்கரா நிலங்களை வினியோகம் செய்வது என்று ஆந்திர மந்திரி சபை முடிவு செய்திருக்கிறது.

★

தடை
சர்க்கார் ஊழியர்கள் பலகார விவகாரம் செய்துகொள்வதைத் தடை செய்து இந்திய சர்க்கார் கூடிய சீக்கிரம் உத்தரவு ஒன்று பிறப்பிப்பார்கள் என்று தெரிகிறது. சென்னை, மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான் ஆகிய மூன்று ராஜ்யங்களும் இதை எதிர்க்கின்றன என்று தெரிகிறது.

★

விடுதலை சர்க்கார்
பிரெஞ்சிந்தியத் திட்டுக்களில் ஒன்றான ஏனாம், தனை பிரெஞ்சுப் பிடிப்பினின்றும் விடுவித்துக் கொண்டதாம். அங்கே இடைக்கால மக்கள் சர்க்கார் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது.

★

மானியம்
நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்தியைப் பரப்ப மத்திய சர்க்கார் பட்ஜெட்டில் மானியம் ஒதுக்குவது பற்றி கல்வி இலாகா ஆலோசனை செய்வதாக ஜெகஜீவன்ராம் அறிவித்தார்.

★

மில் துணி வரி
மில் துணி மீது அதிகப்படி 0—1—3 விற்பனை வரி விதிப்பைக் கைவிடும்படி மத்திய ராஜ்ய சர்க்கார்களிடம் கேட்டுக் கொண்டு மதுரையில் நடைபெற்ற சென்னை ராஜ்யமில் அணி வியாபாரிகள் மாநாட்டில் தீர்மானம் நிறைவேறியது.

★

லஞ்ச ஒழிப்பு
சென்னையில் ரயில்வே லஞ்ச ஒழிப்பு விசாரணைக் கமிட்டியின் சாட்சி நாட்கள் விசாரணை முடிவடைந்துவிட்டது. இக்கமிட்டியின் அடுத்த விசாரணை திருச்சியில் நிகழுமென்று தெரிகிறது.

★

கருத்து வேற்றுமை
செஞ்சட்டையினர் தங்கள் நோக்கை கால மாறுதல்களுக்கேற்ப மாற்றிக்கொள்ள வேண்டும் என்ற பிரச்னையில் கான் சகோதரர்களிடையே கருத்து வேற்றுமை ஏற்பட்டிருக்கிறதாம். பாக். கவர்னர்-ஜெனரல் குலாம் முகமது டாக்டர் கான் சாகிபுடன் மீண்டும் பேச்சு வார்த்தைகள் ஆரம்பித்திருக்கிறார்.

வேலூர் மாநாடு ஒத்திவைப்பு

ஜூன் 19 20-ந் தேதிகளில் வேலூரில் நடைபெற இருந்த வ. ஆ. மா தி. மு கழக 2-வது மாநாடு இடம் மற்றதின் காரணமாக ஜூன் 26, 27 ந் தேதிகளில், வேலூர் டவுன் ஸ்டேஷன் எதிரில் நடைபெறும். மற்ற நிகழ்ச்சிகளில் மாற்றமில்லை.

'நம் நாடு' வெளியூர் ஏஜண்டுகட்கு

'நம் நாடு' வெளியூர் ஏஜண்டு தோழர்கட்கு, மே மாதத்திய பட்டியல் (பில்) அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது. இன்றுவரை பட்டியல் பாக்கியை அனுப்பாமலிருக்கும் ஏஜண்டுத் தோழர்கட்கும், டெபாசிட்டுக்குமேல் அதிகப் பாக்கியுள்ள தோழர்கட்கும் 'நம் நாடு' இதழ் அனுப்புவதை அறிவிப்பின்றி நிறுத்தப்படும். பழைய பாக்கியுள்ள தோழர்களுடைய ஏஜண்டு ரத்து செய்து, பல கடிதங்கள் எழுதியும், நாணயக் குறைவாகவும், மௌனமாயும் இருந்து வருகிறார்கள். 20—6—54-க்குள் பாக்கி ரூபாய் அனுப்பி வைக்கப்படாவிட்டால், இவர்களுடைய பெயர் வரிசை 'நம் நாடு' இதழில் வெளியிடப்படும்.

ஏஜண்டு இல்லாத ஊர்கட்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை; விபரங்கட்கு எழுதவும் :—

இராயபுரம், சென்னை-13
11—6—54

"நம் நாடு,"
பொறுப்பாளர்.

தெ. ஆ. இந்திய ஹைகமிஷனர் அலுவலகம் மூடப்படும்!

8 ஆண்டுகளாக ஹைகமிஷனர் நியமிக்கப்படவில்லை

புதுடில்லி, ஜூன் 13—
தென் ஆப்பிரிக்காவிலுள்ள இந்திய ஹை கமிஷனர் அலுவலகத்தை மூடிவிடுவதென்று இந்திய சர்க்கார் முடிவு செய்திருக்கின்றனர்.

எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் தென் ஆப்பிரிக்காவில் இந்திய ஹை கமிஷனராக இருந்த ஆர். எம். தேஷ்முக்கை அட்போது வைஸ்ராய் கவுன்சிலின் உறுப்பினராக இருந்த டாக்டர் என். பி. கரே, தென் ஆப்பிரிக்க சர்க்காரின் இன வேற்றுமை கொள்கையை எதிர்த்து முகத்தான், திருப்பி அழைத்துக் கொண்டது நினைவிருக்கலாம்.

அதிலிருந்து இன்றுவரை வேறு ஒரு ஹை கமிஷனர் நியமிக்கப்படவே இல்லை. ஒரு செக்ரட்டரியே அலுவலக வேலைகளைக் கவனித்து வந்தார். சென்ற நான்கு ஆண்டு காலமாக ஒரு உதவி - செகரட்டரிதான் அங்கே அலுவலக காரியாலயத்தில் வேலை செய்கிறார்.

இம்மாதிரி ஒரு சிறிய அலுவலகத்தை ஹை கமிஷனர் இல்லாது வைத்திருப்பதின் நோக்கம் தங்களுக்குப் புரியவில்லை என்றும், அண்மையில் ஹை கமிஷனர் ஒருவரை நியமிக்கும் எண்ணம் இல்லையேல் காரியாலயத்தை மூடிவிடுவது சிறந்தது என்றும் தென் ஆப்பிரிக்க சர்க்கார் இந்திய சர்க்காருக்குத் தெரிவித்ததாம்.

இந்தியா சுதந்திரமடைவதற்கு முன்னர் எக்காரணத்தைக் கொண்டு ஹை கமிஷனர் திருப்பி அழைக்கப்பட்டாரோ, அதே காரணங்கள் இன்னமும் நீடிப்பதால், காரியாலயத்தை ஜூலை 1-ந் தேதியிலிருந்து மூடிவிட இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

கழகக் கூட்டங்கள்

★

இராஜபாளையம்
பாண்டியன் திடலில்
15—6—54 மாலை 5 மணிக்கு
பேசுபவர்:
மு. கருணாநிதி

★

காவிரிப்பூம்பட்டினம்
15—6—54 மாலை
தருமகுளக் கடைவீதியில்
தலைவர் கே. கணேசன்
பேசுவோர் :
என். வி. நடராசன்
என். சிட்டப்பா
கே. எஸ். சௌந்தரராசன்

★

பொத்தனூர்
திரு வி. க. திடலில்
15—6—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: ஜி. பி. சோமசுந்தரம்
பேசுவோர் :
ஏ. கோவிந்தசாமி, எம் எல்.ஏ
எம். பி. சுப்பிரமணியன், எம்.எல் ஏ
பொன்னுரங்கசாமி, ,,
எஸ் கே. பேபி, எம்.பி.
ஈ. ஆர். கிருஷ்ணன்

★

நெரிஞ்சிப்பேட்டை
15—6—54 செவ்வாய் மாலை
பேசுவோர் :
மணிஎழிலன்
த. இளங்கோவன்

★

இலையமுதூர் கூடம்
கீழத் தெருவில்
16—6—54 மாலை 6 மணிக்கு
தலைவர்: டி. வி சம்பத்
பேசுவோர் :
என். வி. நடராசன்
கே. எஸ் சௌந்தரராசன்
என். சிட்டப்பா

லம்பாடிப் பெண்ணின் கல்வி ஆர்வம்

சொந்த சமூகத்திற்கு சேவை செய்ய விருப்பம்

திருப்பத்தூர், ஜூன் 13—
மூதலி என்ற இளம் லம்பாடிப் பெண் ஒருத்தி, சுற்றுப்பயணத்திலிருக்கும் சென்னை முதல்வர் காமராசரைக் கண்டு, தான் ஆசிரியர் பயிற்சி பெற அரசாங்கம் உதவவேண்டுமெனக் கேட்டுக்கொண்டாள். தான் இ. எஸ். எல். சி வரை படித்திருப்பதாயும், தனக்கு ஆசிரியப் பயிற்சி அளிக்கப்பட்டால் அவ்வாசனை போ இல்லாத தனது லம்பாடி சமூகத்தினரிடையே கல்வி பரப்ப வசதியாயிருக்குமென அந்தப் பெண் கூறினாள்.

இதைக் கோரிக்கையை முத்து முதலாக எழுதிய ஒரு மனுவின் மூலம் முதல் மந்திரி காமராசரிடம் தந்தனர். காமராசரும், அந்தப் பெண்மணி, ஆசிரியப் பயிற்சி பெறுவதற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்து தர உத்திரவு இட்டுள்ளதாகத் தெரிகிறது.

சீர்காழி—
கம்யூனிஸ்டு கட்சியின் நடவடிக்கைகளில் அதிருப்தி ஏற்பட்டதின் காரணமாக கம்யூனிஸ்டு விவசாய சங்கத்திலிருந்து எட்டுபேர் விலகிவிட்டனர் என்று தெரிகிறது.

... முன்னேற்றக் கழகத் தோழர் இரா. செழியன், எம். ஏ., அவர்கள், அறிவு அச்சகத்தின் அச்சிட்டு வெற்று (நீடூ ... ராயன் செட்டித் தெரு இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.